Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC.624/2025 PW-1**

Name : விஸ்வநாதன்
Father / Husband name : வெங்கடேசன்
Village : திண்டிவனம்
Age : 75
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 03.06.2026

Accused present. Defence counsel present. APP absent. Witness identified by Tindivanam PS PS HC 2967 Tr.Manikandan.

**முதல் விசாரணை**

நான் தற்போது வேலை எதுவும் செய்யவில்லை. சாட்சி குப்பு எனது மனைவி. சாட்சி பத்மா எனது மகள். ஆஜர் எதிரி எனது மகன். சுமார் 1 வருடத்திற்கு முன்னதாக மாலை 6 மணிக்கு நான் எனது வீட்டிலிருந்தபோது யாரோ இரண்டு நபர்கள் வந்து கொம்பால் எனது தலையில் அடித்துவிட்டார்கள். நான் எழுந்து பார்க்கும்போது அவர்கள் ஓடிவிட்டார்கள். என்னை அடித்த நபர்கள் யார் என்று தெரியவில்லை. அடிப்பட்ட நான் திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றேன். நான் மருத்துவமனையிலிருந்தபோது போலிசார் வந்து விசாரித்து கையொப்பம் வாங்கினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் என்னால் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **சாட்சியின் கையொப்பத்துடன் கூடிய அசல் புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எனது மகன் மீது நினைவில்லாமல் புகார் கொடுத்தேன். போலிசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**( அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து கு.வி செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் கு.வி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது )**

இந்த வழக்கு சம்மந்தமாக உங்கள் தரப்பிலும் எதிரி தரப்பிலும் சமாதானமாகிவிட்டோம் எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சமாதான மனுவில் நீங்களும் கையொப்பம் செய்துள்ளீர் என்றால் சரிதான், நான் தன்னிச்சையாக சமாதானம் ஆனேன். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் உங்களை விசாரித்தார்கள் என்றும் விசாரணையின்போது கடந்த 15.12.2024 அன்று மாலை 4 மணியளவில் எனது மூத்த மகன் சிவா வீட்டை அவரின் பெயருக்கு எழுதி வைக்கச்சொல்லி தகாத வார்த்தையால் திட்டி, அங்கிருந்த உருட்டுக்கட்டையால் எனது வலது பக்கத்தலையில் அடித்து கொலை மிரட்டல் விடுத்தார் என்றும், எனது மகள் பத்மா 108 ஆம்புலன்ஸ் மூலமாக என்னை திண்டிவனம் அரசு மருத்துவமனையில் சேர்த்தார் என்றும், மருத்துவமனையில் போலிசார் விசாரிக்கும்போது நடந்த விவரத்தை சொன்னேன் என்றும், புகார் வாக்குமூலத்தில் கையொப்பம் செய்தேன் என்றும், போலிசார் உங்களை விசாரிக்கும் போது மேற்படி உண்மை சொல்லிவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானம் ஆகவிட்ட படியால் அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து விலகி எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC.624/2025 PW-2**

Name : குப்பு
Father / Husband name : விஸ்வநாதன்
Village : திண்டிவனம்
Age : 67
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 03.06.2026

Accused present. Defence counsel present. APP absent. Witness identified by Tindivanam PS PS HC 2967 Tr.Manikandan.

**முதல் விசாரணை**

நான் தற்போது வேலை எதுவும் செய்யவில்லை. அ.சா.1 எனது கணவர். சாட்சி பத்மா எனது மகள். ஆஜர் எதிரி எனது மகன். சுமார் 1 வருடத்திற்கு முன்னதாக மாலை சுமார் 7 மணிக்கு நான் எனது வீட்டிலிருந்தபோது வெளியில் கூட்டமாக இருந்தார்கள். நான் வந்து பார்த்தபோது கணவருக்கு மண்டையில் அடிப்பட்டிருந்தது. யார் அடித்தார்கள் என்று தெரியாது. அடிப்பட்ட எனது கணவரை திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றோம். வழக்கு சம்மந்தமாக போலிசார் விசாரித்தார்கள்.

**( அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து கு.வி செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் கு.வி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது )**

இந்த வழக்கு சம்மந்தமாக உங்கள் தரப்பிலும் எதிரி தரப்பிலும் சமாதானமாகிவிட்டோம் எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சமாதான மனுவில் நீங்களும் கையொப்பம் செய்துள்ளீர் என்றால் சரிதான், நான் தன்னிச்சையாக சமாதானம் ஆனேன். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் உங்களை விசாரித்தார்கள் என்றும் விசாரணையின்போது கடந்த 15.12.2024 அன்று மாலை 4 மணியளவில் எனது மூத்த மகன் சிவா வீட்டை அவரின்

பெயருக்கு எழுதி வைக்கச்சொல்லி தகாத வார்த்தையால் திட்டி, அங்கிருந்த உருட்டுக்கட்டையால் அ.சா.1ன் வலது பக்கத்தலையில் அடித்து கொலை மிரட்டல் விடுத்தார் என்றும், நான் சண்டையை விலக்கிவிட்டேன் என்றும், எனது மகள் பத்மா 108 ஆம்புலன்ஸ் மூலமாக அ.சா.1 ஐ திண்டிவனம் அரசு மருத்துவமனையில் சேர்த்தார் என்றும், மருத்துவமனையில் போலிசார் விசாரிக்கும்போது நடந்த விவரத்தை சொன்னார் என்றும், போலிசார் உங்களை விசாரிக்கும் போது மேற்படி உண்மை சொல்லிவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானம் ஆகவிட்ட படியால் அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து விலகி எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.

Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC.624/2025 PW-3**

Name : பத்மா
Father / Husband name : கௌரிசங்கர்
Village : சென்னை
Age : 45
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 03.06.2026

Accused present. Defence counsel present. APP absent. Witness identified by Tindivanam PS PS HC 2967 Tr.Manikandan.

**முதல் விசாரணை**

நான் தற்போது வேலை எதுவும் செய்யவில்லை. அ.சா.1 எனது அப்பா. அ.சா.2 எனது அம்மா. ஆஜர் எதிரி எனது அண்ணன். சில வருடத்திற்கு முன்னதாக நான் சென்னையிலிருந்தபோது இரவு 10 மணியளவில் எனது அம்மா எனக்கு போன் செய்து அப்பாவிற்கு அடிப்பட்டது என்று சொன்னார். நான் உடனே வீட்டிற்கு வந்து பார்த்தபோது அப்பாவிற்கு தலையில் அடிப்பட்டிருந்தது. எப்படி அடிப்பட்டது என்று எனது அப்பாவை கேட்டபோது யாரோ அடித்துவிட்டதாக சொன்னார். வழக்கு சம்மந்தமாக போலிசார் விசாரிக்கவில்லை.

**( அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து கு.வி செய்ய அனுமதி கேட்டதின் பெயரில் கு.வி செய்ய அனுமதி அளிக்கப்படுகிறது )**

இந்த வழக்கு சம்மந்தமாக உங்கள் தரப்பிலும் எதிரி தரப்பிலும் சமாதானமாகிவிட்டோம் எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சமாதான மனுவில் நீங்களும் கையொப்பம் செய்துள்ளீர் என்றால் சரிதான், நான் தன்னிச்சையாக சமாதானம் ஆனேன். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் உங்களை விசாரித்தார்கள் என்றும் விசாரணையின்போது கடந்த 15.12.2024 அன்று மாலை 4 மணியளவில் எனது அண்ணன் சிவா வீட்டை அவரின்

பெயருக்கு எழுதி வைக்கச்சொல்லி தகாத வார்த்தையால் திட்டி, அங்கிருந்த உருட்டுக்கட்டையால் அ.சா.1 ன் வலது பக்கத்தலையில் அடித்து கொலை மிரட்டல் விடுத்தார் என்றும், அ.சா.2 சண்டையை விலக்கிவிட்டார் என்றும், நான் 108 ஆம்புலன்ஸ் மூலமாக அ.சா.1 ஐ திண்டிவனம் அரசு மருத்துவமனையில் சேர்த்தேன் என்றும், போலிசார் உங்களை விசாரிக்கும் போது மேற்படி உண்மை சொல்லிவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானம் ஆகவிட்ட படியால் அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து விலகி எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.